

**அமரர் தனசேகரனுக்கு இரங்கல்!**

நெஞ்சமெலாம் நிறைந்த அன்பின் பெருந்தகை!
வஞ்சமிலா அன்புடையோன்; வழங்கும் சிரிப்பழகு!
தஞ்சமென நின்றார்க்கு தயை செய்வோன்!
கொஞ்சும் குரலெடுத்து, காட்டும் அபிநயங்கள்,

கேட்பார் மதிமயங்கும்! கண்களும் கதைசொல்லும்!
பாட்டும் கூத்துமென மேடையிலே நடித்ததுண்டு!
ஆட்டம் முடிந்ததென காலம்தான் அழைத்ததுவோ!
சிட்டெனப் **பிரிந்த ஆன்மா சேருமிடம் சேர்வதாக!**

இல்லத்தார்க்கு ஆழ்ந்த இரங்கல்!
கு.ப. அசோகன், 22-09-2023